# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 23/11/2023 |
| Case No. | : O.S. 492/2019 | Nationality | : Indian |
| Name | :ரமேஷ் | Religion | : |
| Father's/Husband's Name | : தண்டபாணி | Age | :48 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2010 லிருந்து சாகுபடி செய்து வருகிறேன். என்னை நிலத்திலிருந்து வெளியேற சொன்னதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கள் யாருக்கு சொந்தமானது என்றால் முகமது ஆரிஃப்-க்கு சொந்தமானதாகும். எதன் அடிப்படையில் நான் வழக்கு சொத்தில் சாகுபடி செய்து வருவதாக கூறிகிறேன் என்றால் குத்தகை அடிப்படையில் சாகுபடி செய்து வருவதாக கூறுகிறேன்.

2. எனது வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் உள்ள விவரங்கள் நான் கூறியது தான் என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டுள்ள குத்தகை சீட்டு எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ-3 வரையிலான குத்தகை வரவு ரசீதுகளில் தாவா சொத்தின் சர்வே எண்ணோ, அது எந்த பசலிக்கு வழங்கப்பட்டது என்ற விவரமோ

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

**Sd/N.Sivapalani/**
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.